

உ
சிவமயம்

# சிவசக்தி ஸ்தோத்திரம்



இதனைத் தினசரி பாராயணஞ் செய்து வருவோர்க்கு
உடற்பிணி அகன்று வாழ்க்கையில்
சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப்பெற்று
மகிழ்ச்சியும் அமைதியும் சுபீட்சமும் நிலவும்.
செய்து பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவசக்தி ஸ்தோத்திரம்



## நடராஜப் பத்து
## மதுரை மீனாட்சியம்மை தோத்திரம்
## திருக்கடவூர் அபிராமியம்மை பதிகம்


தொகுப்பாசிரியர்

சைவப்புலவர், சிவநெறிக் கலாநிதி, கவிமணி, மரபுக்கலைச்சுடர்,
கலைஞானச்சுடர், வில்லிசைக் கலைஞர்

**இராசையா ஸ்ரீதரன்**

- நாச்சிமார்கோயிலடி -



வெளியீடு :

**வலம்புரி - சங்குநாதம்**

இல.02 , இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**2006.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி யண்டம்நீ
 மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ
 மண்டலமி ரண்டேழும்நீ
பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க் குயிரும்நீ
 பிறவும்நீ ஒருவன் நீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
 பெற்றதாய் தந்தைநீயே
கண்ணுநற் பொருளும்நீ இருளும்நீ ஒளியும்நீ
 நாதனாய் வந்தவனும்நீ
நவில்கின்ற கிரகங்க ளொன்பதும்நீ இந்த
 நானிலந் தந்தவனும்நீ
எண்ணரிய சீவகோ டிகளீன்ற அப்பனே
 என்குறைக ளார்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
 எனையீன்ற நடராஜனே. 01

மானாட மழுவாட மதியாடப் புனலாட
 மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
 வனசமுறை பிரமனாடக்
கோனாட வானுலகு கூட்டமெல் லாமாடக்
 குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாடத் தண்டை புலியுடையாடக்
 குழந்தைமுரு கேசனாடத்
தானாட வாடுசம் பந்தரிந் திரர்முனிவர்
 தனியட்ட பாலராடத்
தகுதும்பை யறுகாட நந்தி வாகனமாடத்
 தாளநெறி மாதராட
யானாட வினையோட எனைநாடி இதுவேளை
 இசைவிருதொ டாடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
 எனையீன்ற நடராஜனே. 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வைநம்பிக்
காற்றென்ற மூவாசை ஆற்றொணாச் சுழலிலே
கட்டுண்டு நித்தநித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாம லிரவுபகலும்
உண்டுண் டுறங்குவதைக் கண்டதேயல்லாமல்
ஒருபய னடைந்திலேனைத்
தடமென்ற விடிகரையிற் பந்தபாசங்களெனுந்
தாபரம் பின்னலிட்டுத்
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடைநின்று தடைசெய்ய ஏனென்றுகேளாது
இருப்பதுவும் அழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 03

பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணம்
பகர்வசிய தம்பனமலப்
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
பண்பல்ல ஜாலமல்ல
அம்புகுண் டுகள்விலக மொழியுமந் திரமல்ல
வாகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோ டிகளல்ல
வரியமோ கனமுமல்லக்
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியுங்
கோரக்கர் தன்வந்திரி போகமுனி யிவரெலாங்
கூறும் வயித்தியமல்ல
எம்பரம வுன்னடியை நீங்காது நிலைநிற்கும்
இச்சையை எனக்கருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொந்துவந் தேனென்று பலதர முரைக்கவும்
நுழையாத தென்னமதியோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றுமதை
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடிக்கவுந்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகன் அறுமுகவ னிருபிள்ளை யில்லையோ
சந்ததியி லாதநீயோ
விந்தைதரு சாலங்க ளுன்னிடம் இருக்குதே
வினையொன்றும் அறிகிலேனே
வேதமுஞ் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை இதுவல்லவோ
இந்தவுல கீரேழு மேனளித் தாய்சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 05

வழிகண்டு நின்னடிகள் துதியாத போதினும்
வாஞ்சையில் லாதபோதும்
வாலாய மாய்க்கோயில் சுற்றாத போதினும்
வஞ்சமே செய்தபோதும்
மொழியெதுகை மோனையில் லாமலே பாடினும்
மூர்க்கனேன் மூடனேனும்
மோசமே செய்யினுந் தேசமே கவரினும்
முழுக்காமியே யாயினும்
பழியெனக் கல்லவே தாய்தந்தை யார்க்கலோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைகொளப் பாதியுட லீந்தநீ
பாலனைக் காக்கொணாதோ
எழில்பெருகு மண்டங்களிசைவா யமைத்தநீ
என்குறைகள் தீர்த்தலரிதோ
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தந்தையர் களெனையீன்றதற் கழுவெனோ
அறிவறவதற் கழுவெனோ
அல்லாமல் நான்முகன் றன்னைநொந் தழுவெனோ
ஆசைமூன்றுக் கழுவெனோ
முன்பிறப் பென்னவினை செய்தெனென் றழுவெனோ
மூடரறிவுக் கழுவெனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவெனோ
முத்தியை நினைந்தழுவெனோ
தன்னைநொந்தழுவெனோ உன்னைநொந்தழுவெனோ
தரித்திரதிசைக் கழுவெனோ
தாரணியி லுன்றனருள் பெற்றபெரி யோர்களைத்
தழுவாததற் கழுவெனோ
இன்னுமெப் பிறவிவருமென் றழுவெனோ அவைகள்
எல்லா முரைக்கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 07

காயா மரங்களிற் பூபிஞ் சறுத்தெனோ
கன்னியர்கள் பழிகொண்டெனோ
கடனென்று பொருள்பறித் தேவயிறெரித்தெனோ
கடுவழியில் முள்ளிட்டெனோ
தாயா ருடற்குள்வர என்னவினை செய்தெனோ
தந்தபொருளிலை யென்றுநான்
தானென்ற கெர்வமொடு கொலைகளவு செய்தெனோ
தபசிகளை ஏசினேனோ
வாயார நின்றுபல பொய்சொன்னெனோ வித்து
வாமிசரைவசை சொன்னெனோ
வந்தவரை மரியாதை செய்யா தடித்தெனோ
வழக்கிலோரஞ் சொன்னெனோ
ஈயாதலோபியே ஆனாலுமென் பிழைகள்
எல்லாம்பொறுத் தருள்வாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரிருந் தென்ன தந்தையும் இருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தாரணியை ஆண்டுமென்ன
சேயர்க ளிருந்தென்ன குருவாய்த் திரிந்தென்ன
சீஷர்க ளிருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத் தான்றடுக்க
உதவுமோ இவையெலாஞ் சந்தையுற வென்றுநான்
உன்னிருபதம் பிடித்தேன்
ஈயாதிருக்கத் தியாகராஜப் பெயரும்
இசையுமோ ஏன்புனைந்தாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 09

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும்பாறையோ
இருசெவியு மந்தமோ கருமபல வந்தமோ
ஏழைபங்கின னல்லவோ
என்னன்னை மோகமோ யாரிட்ட சாபமோ
ஈதுனக்கு அழகுதானோ
இப்பிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
இனியுமுன்றனை விடுவெனோ
உன்னை விட்டெங்குசென் றாலுமுய்ந்திடு வெனோ
உனையடுத்துங் கெடுவனோ
ஓயர்விதென்குற்றம் உன்குற்ற மொன்றுமில்லை
உற்றுப்பார் பெற்றவையா
என்னையாள் பவனும்நீ அடிமைநான் ஆதலால்
இனியருள் அளிக்கநினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குருச் சந்திரன் சூரியன்இவரைச்
சற்றெனக் குள்ளாக்கி ராசிபன்னி ரெண்டையும்
சமமாய் நிறுத்தியுடனே
பனியொத்த நட்சத்திரங்கள் இருபத்தேழும்
பக்குவப்படுத்தி யின்னால்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டி
பலரையும் அதட்டியென்முன்
கனிபோல வேபேசி கெடுநினை நினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்கி
சர்த்தனின் தொண்டர்க்குத் தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
ஆள்வதினி உன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே. 11


அன்பே சிவம்

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்"

"வாசிக்கும் பழக்கத்தால் மனிதன்
நேசிக்கும் பண்பைப் பெறுகிறான்"

தினந்தினம் படியுங்கள்
வலம்புரி - நாள் இதழ்

வாரந்தோறும் படியுங்கள்
சங்குநாதம் - வார இதழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மீனாட்சியம்மை தோத்திரம்

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதி செய
சுத்தியாகிய சொற் பொருணல்குவ
சித்தியானை தன் செய்ய பொற்பாதமே!

எனக்கயன்றன் விதிப்படியோ
பூருவத்தின் செயல்தானோவேதோவம்மா
உனக்கடிமையான பின்பிங்கேது
குறை வந்தாலு முனக்கே பாரம்
வனக் கிளியே மலர்த்திருவே
சொக்கரிடப் பங்கில்வளர் வசைமாதேயென்
மனக்கவலை யார்க்குரைப்பேன்
எனக்கிரங்க வேண்டுமம்மா மதுரை வாழ்வே. 01

இனம் பிரிந்த மானது போலுடல் பதைத்து
வறுமையோடிளைத் தெந் நாளும்
மனம் பதறிவுழன்று முன்றிங்கு
அடியேனுக் கருள் சொற்ற வன்னெஞ்சோதான்
தனம்படைத்த பெருக்கமதோ
திருவனந்தம் பராமுகமோதாயே என்மேல்
வனம் பதவிக் கடம்பவன
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத்தாயே. 02

தாயிழந்த கன்றதுபோல் பரதவித்து
நிலைகுலைந்து தவித் தெந்நாளும்
தீயிலுறும் மெழுகது போல்
உருகிமனம் வெறுங்கூடாய்த் திகைத்தேனம்மா
தூயகழுநீர் விழியாய்
நடம்புரியும் பதத்தாளே தோகைமாதே
மாயவற்குச் சகோதரியே
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத்தாயே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத நெடுநீலி பழிக்கஞ்சிப்
பழி சுமக்கப் போராய் போராய்
சொல்லாத நாளுமுண்டோ சொன்னாலும்
கேட்கிலையே என்சொற் கூச்சல்
எல்லாரும் வாழ்ந்திருக்க நான் ஒருவன்
தாழ்ந்திருக்க வியலோவம்மா
வல்லாருங் களப முலை மாமயிலே
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத் தாயே. 04

இருபொழுது வறுமையினால்
அனுதினமும் பிணியதனால் இளைத்துவாடி
உருகுவதும் அயன் விதியோ
அல்லவென்றாலுன்செயலோ உரைக்கமாட்டேன்
திருவுருவே அருளொளியே
தெள்ளமிர்தே சேயிழையே தேவர் போற்றும்
மருவணியுங் குழலணங்கே
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத்தாயே. 05

நஞ்சு தின்ற பேர்களைப் போல்
உடல்மயங்கி வறுமையினால் நலிந்தெந்நாளும்
சஞ்சலமே சமுத்திரமா மலையதனிற்
துரும்பதுபோல் தவித் தேனம்மா
கொஞ்சு கிளி மொழியாளே கஞ்ச
மலர்க் கரத்தாளே தோகை மானே
வஞ்சியிடைத் திருவணங்கே
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத்தாயே. 06

அதிமதுர விதரண நாற் பாடுவதும்
உன்செயலே அதுவல்லாமல்
நதிதரித்தோரிடப் பாகம் விளங்குகின்ற
மாமயிலே நளின மானே
கெதி பெறவேயடி யேனுக் குனது
பதந்தந்தருள்வாய் கிருபை வைத்து
மதிநுதல் போல் திருவணங்கே
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத் தாயே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலையிலிடு மெழுகது போல்
உருகி மனம்வெறுங் கூடாயுலர்ந்து வாடி
நிலை குலைந்து மதிமயங்கி நின்று
மிகப்பரதவித்தல் நீதியோ சொல்
கலைமகளே வடிவணங்கே கமல
முகத்திருமாதே கருணையாளே
மலைமகளே அறந்தழைக்கும்
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத்தாயே. 08

இளமைதனில் வறுமையினால் மனது
மிக நொந்துருகியிளைத்து வாடி
விளை நிலத்திலளர் விழுந்தவாறது
போலடி யேனும் விளங்க நின்றேன்
குழையுடைச்சி அன்ன நடை குயில்
மொழுச்சி நீ கருணை கூர்ந்து ரட்சி
மழலை மொழிக் குயிலணங்கே
சொக்கர் பங்கில் மீனாட்சி மதுரைத் தாயே. 09

திடமுடனே யுனைப்பாட செல்வ
முண்டாம் கல்வியுண்டாம் சிறப்பதாகும்
அடவுடனேயிப் புவியில் எந்தனது
மொழிக் கிரங்கி அருளே செய்து
சடை முடியாரிடப்பாகம் பச்சை
நிறமாய் நின்ற தையல் மானே
மடமயிலே உன்னுடைய மலர்ப் பாதந்
தந்தருளுவாய் மதுரைத் தாயே. 10

இப்பிரசுரம்
"வலம்புரி - சங்குநாதம்"
நிர்வாக இயக்குநர்
உயர்திரு. சிவஞானம் வெற்றி வேலாயுதம் அவர்களால்
அகரம் கணினிப் பதிப்பகத்தில் 28.07.2006 ஆடிப்பூர நன்னாளன்று
அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப்பட்டர் அருளிச்செய்த

# திருக்கடவூர் அபிராமியம்மை பதிகம்

### காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதநால்
வாயைக் கரன்றாள் வழுத்தவாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள் அபி ராமவல்லி
நண்ணும் பொற்பாதத்தில் நன்கு.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண்டலம் நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் முத்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 02

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளன்றோ?
செகமுழுமீ வொற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரியுல காண்டு பின்பு
புகர்முகத்(து) ஐராவதப் பாக ராகிநிரை
புத்தேளிர் வந்து போற்றிப்
போக தேவேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறிகடல்கள் ஏழையுந் திகிரிஇரு நான்கையும்
மாதிறல் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்
பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனையும் அரையிற்
புலியாடை உடையானையும்
முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 04

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாமலே கொடுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலி அகிலங்களுக்(கு) அன்னை என்றோதும்
நீலியென்(று) ஓது வாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதேரைக்கும் அன்றுற்பவித் திடுகருப்
பையுறு சீவனுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத'
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லாமலே
நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உனக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியனா னால்அந்
நகைப்புனக்கே அல்லவோ?
அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 06

நீடுல கங்களுக்(கு) ஆதரவாய் நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீ மனைவியாய் இருந்தும்
வீடுவீ டுகடோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலச்சை யும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
உன்மத்த னாகி அம்மா
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே. 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினிற் போய்
நடுவி னிலிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு
ஈனந்தனைத் தள்ளி எனதுநா னெனுமானம்
இல்லா மலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்புதைத்து நெஞ்(சு)
இருளற விளக்கேற்றியே
ஆனந்த மானவிழி அன்னமே உன்னைஎன்
அகத்தாமரைப் போதிலே
வைத்துவே றேகலை யற்றுமே லுற்ற
பரவசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 08

சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினாலெ னக்குத்
தாயல்லவோ? யான் உன் மைந்தனன்றோ?
எனது சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபாலூட்டி என் முகத்தைஉன்
முன்தானையால் துடைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான் குலவி
விளையாடல் கொண்டருண் பொழிந்(து)அங்கை
கொட்டி வாவென்(று) அழைத்துக்
குஞ்சரமுகன் கந்தனுக்(கு) இளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலி லேதோன்று மாறாத அமுதமே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்
கண்போதி னாலுன் முகப்போது தன்னையான்
கண்டு தரிசனை புரிகிலேன்
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆலயத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்
மோசமே போய் உழன்றேன்
மைப்போத கத்திற்கு நிகரெனப் போது
எருமைக்கடா மீதேறியே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங்கித் தியங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 10

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந் துரத்த
பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்த
பசியென்பதுந் துரத்த
பாவந் துரத்த பதிமோகந் துரத்த
பலகா ரியமுந் துரத்த
நகையுந் துரத்த ஊழ்வினையுந் துரத்த
நாளும் துரத்த வெகுவாய்
நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னை
நமனுந் துரத்து வானோ?
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ! சில அறிவுரைகள்

- அறஞ்செய விரும்பு; கருமியாயிராதே!
- ஆலயந் தொழு; ஆண்டவனை நினை!
- இன் சொல் பேசு; நன்மையே செய்!
- ஈவது கடமை; தானதர்மஞ் செய்!
- உண்மையே பேசு; நன்மையே பெறுவாய்!
- ஊண் உறக்கம் குறை; உத்தமனாயிரு!
- எண்ணும் எழுத்தும் படி; ஏற்றம் பெறுவாய்!
- ஏழைக்கு இரங்கு; அன்னதானஞ் செய்!
- ஐந்தெழுத்தை ஓது; நிம்மதி கிடைக்கும்!
- ஒற்றுமையே பலம்; சேர்ந்து வாழ்!
- ஓதுவது ஒழியேல்; கற்றபடி நட!

S. SIVATHASAN
JUSTICE OF THE PEACE

வாசியுங்கள்!

வலம்புரி – சங்குநாதம்

நாளிதழ் வாரமலர்

அகரம் கணினிப் பதிப்பகம்
351, வெலிங்டன் சந்தி, மணிக்கூண்டு வீதி, யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org